සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
**Department of Samurdhi Development**
ග්‍රාමීය සංවර්ධන , සමාජ ආරක්ෂණ සහ ප්‍රජා සවිබල ගැන්වීමේ අමාත්‍යාංශය
கிராமிய அபிவிருத்தி , சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு
Ministry of Rural Development, Social Security and Community Empowerment


| මගේ අංකය<br>**எனது இல**<br>**My No** | DSD/HO/08/PM/04/EMPOWER - 2026 | ඔබේ අංකය<br>**உமது இல**<br>**Your No** | ........................................ | දිනය<br>**திகதி**<br>**Date** | 2026.01.09 |
|---|---|---|---|---|---|

**சமுர்த்தி சுற்றறிக்கை இலக்கம் : 2026/01**

**சகல மாவட்ட செயலாளர்கள்/மாவட்ட சமுர்த்தி மேலதிக பணிப்பாளர் தலைமை அதிபதிகள்,**
**மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்கள்,**
**பிரதேச செயலாளர்கள்,**
**பிரதி/உதவிப் பணிப்பாளர்கள்.**

**அஸ்வெசும நன்மைகளைப் பெறுகின்ற வறிய மிக வறிய மற்றும் நெருக்கடிக்குள்ளான உள்ளான சமூக குழுக்களுக்குச் சொந்தமான பயனாளிக் குடும்பங்களிலிருந்து வலுவூட்டுவதற்கு விருப்பத்தினை தெரிவிக்கின்ற இணக்கப்பாட்டுக் கடிதத்தினைப் பெற்றுக் கொள்வதும் இனங்காணப்பட்ட பயனாளிக் குடும்பங்களின் பொருட்டு குடும்ப அபிவிருத்தி திட்டமிடலை தயாரித்தலும் - 2026**

**01. விருப்பத்தினை தெரிவிக்கும் இணக்கப்பாட்டுக் கடிதத்தினை பெற்றுக்கொள்ளல்**

i. அஸ்வேசும நலன்புரி திட்டத்தின் கீழ் நன்மைகளை பெறுகின்ற பயனாளிக் குடும்பங்களை வலுவூட்டும் வேலைத் திட்டம் அமைச்சரவை தீர்மானமொன்றின் பிரகாரம் 2024 ஆம் ஆண்டில் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைய சமூக வலுவூட்டல் வேலைத்திட்டம் ஒன்றினை தயாரித்து மாவட்ட, பிரதேச செயலகப் பிரிவு மற்றும் கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிட்டதுடன் அதற்கமைய தகுதியான பயனாளிக் குடும்பங்களை 2025 ஆம் ஆண்டிலிருந்து 2029 ஆம் ஆண்டு வரை வருடத்திற்கு வருடம் குழுக்களாக இனம் காண்பதும் மேற் சொன்ன குடும்பங்களை பொருளாதார, சமூக மற்றும் உளவியல் ஆகிய துறைகளின் கீழ் வலுவூட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

2026 ஆம் ஆண்டிலிருந்து முன் வரும் ஆண்டுகளில் வலுவூட்டும் வேலைத் திட்டத்தின் கீழ் வலுவூட்டுவதற்குத் தகுதியான சகல அஸ்வெசும பயனாளிகளின் இணக்கப்பாட்டுக் கடிதம் ஒன்றினை பெற்றுக் கொள்வதற்கு தீர்மானித்துள்ளது.

ii. அந்த இணக்கப்பாட்டுக் கடிதம், அஸ்வேசும நன்மைகளைப் பெறுகின்ற வறிய மிகவறிய மற்றும் நெருக்கடிக்குள்ளான சமூக குழுக்களுக்குச் சொந்தமான குடும்பங்களில் இருந்து கீழ் குறிப்பிடப்படும் தகுதிகளை உடைய குடும்பங்களில் இருந்து மாத்திரம் கையொப்பமிட்டு பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்." குடும்ப அங்கத்தவர்கள் 02 இற்குக் குறைந்த அல்லது 02 இற்கு மேற்பட்ட எண்ணிக்கையினையுடையவர்கள் உள்ள மற்றும் பலனுள்ள பொருளாதார பணி ஒன்றில் ஈடுபடக்கூடிய 16 இற்கும் 60 இற்கும் இடைப்பட்ட வயதுத் தொகுதியில் ஒரு நபராவது உள்ள பயனாளிக் குடும்பம் ஒன்றாக இருத்தல்.

iii. இணக்கப்பாட்டுக் கடிதத்தின் மாதிரி ஒன்று 01ஆம் இணைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது.

iv. இணக்கப்பாட்டுக் கடிதத்தினை பெற்றுக்கொள்ளும் பணியின் முதலாவது நடவடிக்கையாக நலன்புரி நன்மைகள் சபையினால் வெளியிடப்பட்டு தற்போது அஸ்வெசும நன்மைகள் செலுத்தப்படுகின்ற பயனாளிக் குடும்பங்களின் பெயர் பட்டியலில் இருந்து பொருத்தமான குடும்பங்களை இனம் காணுதல் வேண்டும். கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் பணியாற்றுகின்ற சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடம் பயனாளிகளின் பெயர் பட்டியல் இல்லாவிடின் சமுர்த்தி திணைக்களத்தின் https://çrm.esamurdhi.gov.lk வலைக் கடப்பிடத்தில்(Website) தகவல் தொழில்நுட்ப பிரிவின் மூலம் உரிய சமுர்த்தி அபிவிருத்தி


1වන අදියර,4 වන මහල , සෙත්සිරිපාය , බත්තරමුල්ල. / 1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல / 1st Step, 4 th floor, Sethsiripaya Battaramulla

| | අධ්‍යක්ෂ ජනරාල්<br>பணிப்பாளர் தலைமையதிபதி<br>Director General | අතිරේක අධ්‍යක්ෂ ජනරාල් (පාලන හා ආයතන)<br>மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதி ( நிர்வாகம்/தாபனம்)<br>Additional Director General (Admin & Establishment) | ප්‍රධාන ගණකාධිකාරී<br>பிரதான கணக்காளர்<br>Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය)<br>பணிப்பாளர் (குறு நிதி )<br>Director (Micro Finance) | කාර්යාලය<br>அலுவலகம்<br>Office |
|---|---|---|---|---|---|
| Tel- | 011-2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dgsamurdhi@gmail.com | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | **Hot Line:0112-885582** | **Hot Line: 011- 2887722** |
| | | **Hot Line :0112-889007** | | | |

உத்தியோகத்தர்களுக்கு வழங்கி உள்ள பயனர் பெயர் மற்றும் கடவுச்சொல்லை பயன்படுத்தி பிரவேசித்து பயனாளிப் பெயர் பட்டியல் ஒன்றை பெற்றுக் கொள்ளுமாறு அறியத் தருகின்றேன். இதன் பொருட்டு மாவட்ட A+ உத்தியோகத்தர்களின் மற்றும் சமுர்த்தி வங்கி முகாமையாளர்களின் ஒத்துழைப்பினை பெற்றுக்கொள்ளலாம்.

v. அதன் பின்னர் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் மேற்படி தகைமைகளை உடைய ஒவ்வொரு பயனாளி குடும்பங்களையும் தனித்தனியாக சந்தித்து வலுவூட்டல் வேலைத் திட்டம் தொடர்பில் விளக்கப்படுத்தி இணக்கப்பாட்டு கடிதத்தினை(இணைப்பு 01) வாசித்து/வாசிக்கக் கொடுத்து பயனாளியின் கையொப்பத்தினை பெற்றுக் கொள்ள வேண்டும்.

இங்கு 2025 ஆம் ஆண்டில் வலுவூட்டுவதற்கு இணக்கப்பாட்டினை வழங்கி தெரிவு செய்யப்பட்ட ADB,World Bank முன்னோடி கருத்துத்திட்டங்களின் பொருட்டு உள்ளாகியுள்ள பயனாளிகள் தவிர்ந்த ஏனைய தகுதிகளை உடைய அஸ்வெசும நன்மைகளை பெறும் சகல பயனாளிகளினதும் இணக்கப்பாட்டு கடிதத்தினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

vi. மேற்படி தகுதிகளை உடைய பயனாளி ஒருவர் அல்லது குடும்பம் ஒன்று வலுவூட்டல் வேலைத் திட்டத்தோடு தொடர்பு கொள்வதற்கு விருப்பமிமையினை தெரிவிக்கின்ற சந்தர்ப்பத்தில் அதற்கான காரணங்கள் கீழ் குறிப்பிடப்படுகின்ற ஒன்றாயின் (01) அது தொடர்பில் இணக்கப்பாட்டு கடிதத்தில் காரணம் மற்றும் இலக்கத்தினை குறிப்பிட்டு கையொப்பத்தினை பெற்றுக் கொள்ளல் வேண்டும். அதன் பின்னர் அக்காரணத்தினையும் EIS தகவல் வலைத்தளத்தில் பதிவேற்றுதல் வேண்டும்.

வலுவூட்டல் வேலை திட்டத்தில் இணைவதற்கு விருப்பமின்மைக்கான காரணங்கள்.

1. வலுவூட்டப்பட்டிருத்தல்
2. பயனாளி மரணித்திருத்தல் (பெயர் பட்டியலில் பெயர் அகற்றப்படாமல் உள்ளமை மற்றும் குடும்பத்தில் பிற தகுதிகளை உடைய அங்கத்தவர்கள் இல்லாமை போன்றவை)
3. வலுவூட்டல் வேலைத் திட்டத்தில் உள்ளடக்கிக் கொள்வதற்கு தகுதியின்மை .
   **உதாரணமாக**; நிரந்தர வசிப்பிடமின்மை, பிள்ளைகள் தொழில்களில் ஈடுபடுதல்.
4. தனிப்பட்ட வகையில் வலுவூட்டல் பணியோடு தொடர்பு கொள்வதில் விருப்பமின்மை.
5. நிதி உதவிகள்/கடன் வசதிகளை பெற்றுக் கொள்ள விருப்பமின்மை.

vii. மேல் உள்ள பிரகாரம் இணக்கப்பாட்டு கடிதம் பெற்றுக்கொள்ளப்பட்ட ஒவ்வொரு பயனாளியினதும் விருப்பம்/விருப்பமின்மையை Empower IS தகவல் முகாமைத்துவ வலையமைப்பில் பதிவேற்றுதல் வேண்டும். ஏற்கனவே தகவல் முகாமைத்துவ வலையமைப்பின் செயல்பாடு, நுழைவு மற்றும் தகவல்களை பதிவேற்றுவது தொடர்பில் A+ உத்தியோகத்தர்கள் ஊடாக பிரிவு மட்டத்தில் உத்தியோகத்தர்கள் விளக்கமளிக்கப்பட்டுள்ளனர்.

அதன் பிரகாரம், உத்தியோகத்தர்களால் தங்களது ஸ்மார்ட்I(Smart)தொலைபேசி ஊடாக அல்லது சமுர்த்தி வங்கி,வங்கிச் சங்கத்திற்கு சொந்தமான கணினி ஒன்றினை பயன்படுத்தி உரியவலையமைப்பில் பிரவேசித்து தகவல்கள் மற்றும் தரவுகளை பதிவேற்றுதல் வேண்டும். இக்கணினி வசதிகளை வழங்குவது சமுர்த்தி வங்கி, வங்கிச் சங்க முகாமையாளர்களால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

இத்தகவல்களை பதிவேற்றும்போது தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களால் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு வழங்கியுள்ள வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிரச்சனைகள் சிக்கல்கள் உருவாகின்ற சந்தர்ப்பத்தில் மாவட்ட A+ உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பினை பெற்றுக் கொள்ளுமாறும் அறிய தருகின்றேன்.

viii. விருப்பத்தினை தெரிவிக்கின்ற பயனாளிகளின் இணக்கப்பாட்டுக் கடிதத்தினை பெற்றுக் கொள்வது மற்றும் வலையமைப்பில் தகவல்களை பதிவேற்றுவது 2026.01.31 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்ய வேண்டியதுடன் அதன் பின்னர் இணக்கப்பாட்டு கடிதத்தினை ஆவணப்படுத்தி சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரால் தலைமை பீட முகாமையாளருக்கு ஒப்படைத்தல் வேண்டும்

**02. 2026 ஆம் ஆண்டிற்கான குடும்ப இலக்குகளும் குடும்பங்களை இனம் காணும் அளவுகோலும்.**

2026 ஆம் ஆண்டின் பொருட்டு 200,000 அஸ்வெசும பயனாளிக் குடும்பங்களை வலுவூட்டுவதே தேசிய இலக்காகும். மாவட்ட இலக்குகளை தயாரிக்கும் போது ஒவ்வொரு சமூக குழுக்கள் மற்றும் பயனாளிக் குடும்பங்களின் விகிதாசாரங்கள் உள்ளடங்குகின்ற பிரகாரம் கணக்கிடப்பட்டுள்ளது. அவை தொடர்பான விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. பிரதேச மற்றும் கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் இலக்குகளை தயாரிப்பதற்கும் இந்த சமூகக் குழுக்களையும் வீதாசாரங்களையும் அதே விதத்தில் பயன்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

| சமூகக் குழு | நன்மைகளைப் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை | தெரிவு செய்ப்பட்ட வீதம் |
|---|---|---|
| மிக வறிய | 51,210 | 25% |
| வறிய | 119,490 | 60% |
| நெருக்கடிக்குள்ளான | 29,300 | 15% |
| மொத்தம் | 200,000 | 100% |

**I. மாவட்ட இலக்குகள்**

மாவட்டத்தின் அஸ்வெசும நலனுதவியைப் பெறுகின்ற எண்ணிக்கைக்கு ஏற்ப ஒவ்வொரு மாவட்டத்தின் பொருட்டும் கிடைக்கப்பெறுகின்ற பயனாளிக் குடும்ப இலக்குகளின் எண்ணிக்கையினை கணக்கிட்டு இணைப்பு 02 உடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன்பின்னர் மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள இலக்குக் குடும்பங்களின் எண்ணிக்கை பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் ஒதுக்குவது மாவட்ட சமுர்த்தி பணிப்பாளரால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

**II. பிரதேச செயலகப் பிரிவு இலக்குகள்**

மாவட்டத்தின் பொருட்டு வழங்கப்படுகின்ற இலக்குகளை தனது மாவட்டத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகப் பிரிவுகளின் பொருட்டு தனித்தனியாக இலக்குகளை தயாரித்து வழங்குதல் வேண்டும். இங்கு ஒவ்வொரு பிரிவிலும் அஸ்வெசும நன்மைகளைப் பெறுகின்ற வறிய, மிகவறிய மற்றும் நெருக்கடிக்குள்ளான குடும்பங்களின் எண்ணிக்கை, கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை, வளங்கள் மற்றும் பிற வசதிகளின் விரிவாக்கம் போன்ற காரணிகள் சகலதையும் அல்லது பலவற்றினையும் அடிப்படையாகக் கொண்டு இலக்குகளை தயாரிக்குமாறும் அரியத் தருகின்றேன்.

**III. கிராம உத்தியோகத்தர் பிரிவின் இலக்குகள்.**

பிரதேச செயலகப் பிரிவின் பொருட்டு ஒதுக்கி வழங்கப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கையை கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கிடையில் வகுத்து வழங்குவது பிரதேச செயலாளர் தலைமையில் மேற்கொள்ளப்படல் வேண்டும். இங்கு சகல சமூகக் குழுக்கள் மற்றும் வழங்கப்பட்டுள்ள வீதாசாரங்களும் உட்படுகின்ற பிரகாரம் அஸ்வெசும நன்மைகளைப் பெறுகின்ற குடும்பங்களின் எண்ணிக்கை, வளங்கள் மற்றும் ஏனைய வசதிகளின் விரிவாக்கம் போன்ற சகல காரணிகள் அல்லது ஒரு சிலவற்றினை அடிப்படையாகக் கொண்டு இலக்குகளை வழங்குவது மேற்கொள்ளப்படல் வேண்டும்.

தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் கிராம உத்தியோகத்தர் பிரிவின் பொருட்டு இலக்குகளை வழங்கும்போது ADB,World Bank நிதி உதவி வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கும் இலக்குகளை வழங்குதல் வேண்டும். இங்கு தகுதியான அஸ்வெசும பயனாளிகளை இனங்காணும்போது முன்னோடி வேலைத்திட்டத்தின் பொருட்டு ஏற்கனவே உள்வாங்கிக் கொள்ளப்பட்ட (Intake) மற்றும் கட்டுப்பாட்டு குழுக்களில்(Control Group) உள்ளாகியுள்ள பயனாளிகள் தவிர்ந்த ஏனைய பயனாளிகளிலிருந்து பொருத்தமான குடும்பங்களை 2026 ஆம் ஆண்டில் தெரிவு செய்து கொள்ளல் வேண்டும்.

ஏதேனும் ஒரு பிரிவில் ஒவ்வொரு சமூகக் குழுக்களிலும் இருந்து பயனாளிகளை தெரிவு செய்து கொள்வதற்குப் போதுமான அளவு பயனாளிக் குடும்பங்கள் இல்லாவிடின் விகிதாசாரங்களை கவனத்தில் கொள்ளாது பிற சமூகக் குழுக்களில் இருந்து குடும்பங்களை தெரிவு செய்து கொள்வதற்கு வாய்ப்பளிக்கப்படும்.

**IV. கிராம உத்தியோகத்தர் பிரிவு ஒன்றில் பதில் கடமையாற்றும் உத்தியோகத்தர் ஒருவர் பணியாற்றும் சந்தர்ப்பத்தில் பிரிவிற்கான இலக்கினை வழங்குதல்.**

கிராம உத்தியோகத்தர் பிரிவில் பதில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் உள்ள சந்தர்ப்பத்தில் பிரதேச செயலகப் பிரிவின் இலக்குகள் பூரணப்படுத்தப்படுகின்ற பிரகாரம் மிகப் பொருத்தமான குடும்ப எண்ணிக்கைகளின் இலக்குகளை வழங்குவது பிரதேச செயலாளரால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

**V. கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் வலுவூட்டுவதற்கு பொருத்தமான குடும்பங்களை இனம் காணும் அளவுகோல்கள்.**

நலன்புரி நன்மைகள் சபையினால் வௌியிடப்பட்டுள்ள தற்போது நன்மைகளை பெறுகின்ற பயனாளிப் பெயர் பட்டியலில் இலக்கு குடும்ப எண்ணிக்கைகளை இனம் காண்பதற்கு கீழே 01ஆம் மற்றும் 02ஆம் இலக்க அளவுகோல்களுடன் ஏனைய எடுகோல்களிலிருந்து ஒன்றையாவது (01) பூர்த்தி செய்கின்ற குடும்பங்களை 2026 ஆம் ஆண்டில் வலுவூட்டுவதற்கு இனம்காணுதல் வேண்டும்.

இங்கு பிற, அளவுகோல்களை கவனத்தில் கொள்ளும்போது சமர்ப்பிப்பதற்கு உத்தேசித்துள்ள சுயதொழில் அல்லது தொழில் வாய்ப்புகள் தொடர்பிலும் கவனத்தினை செலுத்துதல் வேண்டும்.

1. தெரிவு செய்யப்படும் குடும்பங்கள் அஸ்வெசும நன்மைகளை பெறுகின்ற வறிய மிக வறிய அல்லது நெருக்கடிக்குள்ளான சமூகக் குழுக்குச் சொந்தமானவர்களும் வலுவூட்டுவதற்கு விருப்பத்தினை கொண்ட குடும்பம் ஒன்றாகவும் இருத்தல்.

2. தெரிவு செய்யப்படும் குடும்பத்தில் 16 இற்கும் 60 இற்கும் இடைப்பட்ட வயதை உடைய ஒருவர் அல்லது அதிகமான எண்ணிக்கையை உடையவர்கள் உள்ளமை. இங்கு 16 வயதிற்கு மேற்பட்ட பிள்ளைகளை உட்படுத்துவதாயின் பாடசாலையை விட்டு விலகிய மற்றும் திருமணமாகாத பிள்ளைகள் மாத்திரம் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

3. ஏலவே ஏதேனும் ஒரு சுய தொழில்/வருமானமீட்டல் கருத்திட்டம் ஒன்றில் ஈடுபடுகின்ற அல்லது புதிதாக சுய தொழில் ஒன்றினை/வருமானமீட்டல் கருத்திட்டம் ஒன்றினை ஆரம்பிப்பதற்கு ஊக்கத்தினையுடைய ஒருவர் அல்லது குடும்பம் ஒன்றாக இருத்தல்.

4. குடும்ப அங்கத்தவர் ஒருவர் 16-45 இற்கும் இடைப்பட்ட வயதில் உள்ளவர்கள் மற்றும் தொழில் பயிற்சி ஒன்றின் பின்னர் உள்நாட்டு/வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஒன்றில் ஈடுபடுவதற்கு விருப்பமுள்ளமை.

5. இங்கு தொழிற் தகுதி இல்லாத இருப்பினும் பயிற்சி/திறமை/ஆற்றல்கள் ஏற்கனவே உள்ள ஆட்களைக் கொண்ட குடும்பம் ஒன்றினது நபர் ஒருவரின் பொருட்டு (அவன்/அவள்) தொழில் தகைமைகளை வழங்குவதற்கு (RPL Method) வயதானது 60 வருடங்கள் வரை கவனத்தில் கொள்ளலாம்.

VI. **இனம் காணப்பட்ட குடும்பங்களின் அடிப்படை தகவல்களை சேகரிப்பதும் குடும்ப அபிவிருத்தி திட்டமிடலை தயாரிப்பதும்.**

1. 2026 ஆம் ஆண்டில் வலுவூட்டுவதற்கு இனங்காணப்பட்ட ஒவ்வொரு பயனாளி குடும்பத்தின் பொருட்டும். அடிப்படைத் தகவல்கள் மற்றும் குடும்ப அபிவிருத்தி திட்டமிடல் ஒன்றை தயாரித்தல் வேண்டும். அதற்காக இணைப்பு - 03 படிவத்தினை பயன்படுத்துதல் வேண்டும்.

2. இத்தகவல்கள் மற்றும் திட்டமிடல்களைத் தயாரிப்பது என்பன இனங்காணப்பட்ட பயனாளிக் குடும்பங்களை சந்தித்து கலந்துரையாடி தகவல்களை சேகரித்து தயாரித்தல் வேண்டும்.

3. விசேடமாக பொருளாதார, சமூக மற்றும் உளவியல் துறைகளின் கீழ் மேற் சொன்ன குடும்பங்களின் பொருட்டு மேற்கொள்ள வேண்டிய வலுவூட்டல் பணிகள் தொடர்பில் சிறந்த விதத்தில் ஆழ்ந்த ஆய்வுடன் தேடிப் பார்த்தல் வேண்டும்.

   இங்கு, வணிக நடவடிக்கைக்கான சந்தர்ப்பம்/ஒரு தொழில் பயிற்சியின் பின்னர் தொழில் வாய்ப்பில் ஈடுபடுத்தச் செய்கின்ற சந்தர்ப்பத்தில், குடும்ப அபிவிருத்தித் திட்டமிடலில் சுய தொழில்/வேலைவாய்ப்பு தொடர்பில் குறிப்பிடும் போது கீழுள்ள ஆலோசனைகளின் பிரகாரம் தகவல் முகாமைத்துவ முறைமை ஊடாக(EIS) வாழ்வாதார வழிகள் மற்றும் தொழில்களில் ஈடுபடச் செய்தல்/பயிற்சி வகைகள் தொடர்பான விபரங்கள் குறிப்பிடப்படல் வேண்டும்.

I. வாழ்வாதாரப் பிரிவின் கீழ் சுய தொழில் வாய்ப்புகளை தெரிவு செய்கின்ற சந்தர்ப்பத்தில் கீழ் குறிப்பிடப்படும் ஆறு முக்கிய துறைகளில் 01 ஐ முதலில் குறிப்பிடுவதும் அதன் தொடர் துறைகளை EIS முறைமைகளில் இருந்து தெரிவு செய்து கொள்ளல் வேண்டும்.

- விவசாயக் கைத்தொழில்
- கால்நடை வளங்கள்
- மீன்பிடி நடவடிக்கைகள்
- உற்பத்திகள்
- சந்தைப்படுத்தல்
- சமுர்த்தி ஆரோக்கிய உணவகங்கள்

உதாரணமாக :- பயனாளி ஒருவர் சுய தொழிலாக மாம்பழச் செய்கையை தெரிவு செய்கின்ற சந்தர்ப்பத்தில் விவசாயத்துறையின் கீழ் மாம்பழச் செய்கையை தொடர் துறையொன்றாக தெரிவு செய்து குறிப்பிடல் வேண்டும்.

ii. வேலைவாய்ப்பில் ஈடுபடச் செய்தல்/பயிற்சிக்கான துறைகளை குறிப்பிடும்போது EIS முறைமையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலை வாய்ப்புகளைத் தெரிவு செய்து குறிப்பிடல் வேண்டும்.

இவை தொடர்பான விபரங்களை பெற்றுக்கொள்ள EIS முறைமையில் பிரவேசித்து விபரங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு அரியத்தருகின்றேன்.

4. இவ்வாறு தயாரிக்கின்ற குடும்ப அபிவிருத்தி திட்டமிடல்களை பிரிவுப் பொறுப்பு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரின் பொறுப்பில் வைத்துக் கொள்ள வேண்டும்.

VII. இனம் காணப்பட்ட பயனாளிகளின் பட்டியலை சமுதாய அபிவிருத்தி சபைக்கு (CDC) சமர்ப்பித்தல்.

1. மேலே VIஆம் இலக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் இனம் காணப்பட்ட பயனாளிகளின் அடிப்படைத் தகவல்கள் மற்றும் குடும்ப அபிவிருத்தித் திட்டமிடல் விபரங்களை தகவல் முகாமைத்துவ முறைமையில்(EIS) பதிவேற்றுதல் வேண்டும்.

2. அதன் பின்னர் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் EIS முறைமையில் அறிக்கைகளில் பிரவேசித்து வலுவூட்டப்படுகின்ற திசை என்ற பெயரில் உள்ள அறிக்கையின் பிரதி ஒன்றினை எடுத்துக்கொண்டு கிராம உத்தியோகத்தர் பிரிவின் சமுதாய அபிவிருத்தி சபை(CDC) அறிந்து கொள்வதற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

VIII. பூர்த்தி செய்கின்ற படிவங்களை அச்சிடுதல் மற்றும் செலவு செய்தல்.

1. படிவங்களை அச்சிடுவது மாவட்ட சமுர்த்தி பிரிவு/பிரதேச செயலகங்கள் மூலம் மேற்கொண்டு தேவையான பிரதிகளின் அளவை களத்துறையில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு வழங்குதல் வேண்டும்.

2. ஒவ்வொரு படிவத் தொகுதியின் (இணைப்பு 1 மற்றும் 03) அச்சின் பொருட்டு ரூ.20/=தொகையினை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்

3. படிவங்களின் அச்சின் பொருட்டு தேவையான நிதி ஒதுக்கீடு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் மாவட்ட சமுர்த்தி பிரிவிற்கு வழங்கப்படும். பிரதேச செயலகங்கள் மூலம் அச்சு நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற சந்தர்ப்பத்தில் மாவட்ட சமுர்த்தி பிரிவிலிருந்து நிதி ஒதுக்கீட்டினை பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

03. இனம் காணப்பட்ட குடும்பங்களின் பொருட்டு சேகரிக்கின்ற அடிப்படைத் தகவல்கள் மற்றும் குடும்ப அபிவிருத்தி திட்டமிடல் தொடர்பான தகவல்களை தகவல் முகாமைத்துவ முறைமையில்(Empower IS) பதிவேற்றுதல் வேண்டும். இதற்காக உத்தியோகத்தர்களின் ஸ்மார்ட் வகையிலான கையடக்கத் தொலைபேசி அல்லது சமுர்த்தி வங்கி/வங்கிச் சங்கங்களின் இணையத்தள வசதிகளுடனான Desktop கணினிகளை பயன்படுத்தி இத் தகவல்களையும் விபரங்களையும் பதிவேற்றுதல் வேண்டும்.

04. தகுதியான குடும்பங்களை இனம் காண்பது, குடும்ப அபிவிருத்தி திட்டமிடலைத் தயாரிப்பது மற்றும் பயனாளிகளின் தகவல்கள் முகாமைத்துவ முறைமையில் பதிவேற்றுதல் உட்பட சகல நடவடிக்கைகளையும் 2025.02.15 ஆம் திகதிக்கு முன்னர் முடிப்பது கட்டாயமானதாகும் என்பதனை அறியத் தருகின்றேன்.

05. இனம் காணப்பட்ட குடும்பங்களுக்கான வணிகத் திட்டமிடல்களை தயாரித்தல் சுய தொழில் மற்றும் வேலை வாய்ப்புகள்/தொழில் பயிற்சிகளின் பொருட்டு நிதியுதவிகளை வழங்குவது சமுர்த்தி சவிபல - II கடன் திட்டத்தினை அறிமுகப்படுத்துவது சமுர்த்தி வங்கியின் பிற கடன் வேலைத் திட்டங்களின் கீழ் கடனை வழங்குவது மற்றும் சமூக அபிவிருத்தி வேலைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்குரிய ஆலோசனைகளை வழங்குவது ஒவ்வொரு அபிவிருத்தி பிரிவினாலும் மேற்கொள்ளப்பட உள்ளது.

06. இனங்காணப்பட்ட பயனாளி அல்லது குடும்ப அங்கத்தவர் ஒருவர் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் மற்றும் சமுதாய அடிப்படை வங்கியில் இதுவரையில் அங்கத்துவத்தினை பெறாவிடின் எதிர்காலத்தில் அங்கத்துவத்தினை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அறியத் தருகின்றேன்.

07. அஸ்வெசும நன்மைகள் கிடைக்கப் பெறாத (சமுர்த்தி நிவாரணத்தினை பெற்ற) குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை 2026 ஆம் ஆண்டின் பொருட்டு வலுவூட்டல் வேலைத் திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட மாட்டாது என்பதுடன் 2025 ஆம் ஆண்டில் இனங்காணப்பட்ட பயனாளிகளின் பொருட்டு பொருளாதார, சமூக மற்றும் உளவியல் துறைகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்ற வேலைத் திட்டங்களை வழங்கப்பட்டுள்ள சுற்றறிக்கை ஆலோசனைகளுக்கு அமைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறியத் தருகின்றேன்.

08. இப்பணியோடு தொடர்பு கொள்ளப்படுகின்ற மாவட்ட பிரதேச வலய மற்றும் கிராம மட்டத்தின் சகல உத்தியோகத்தர்களுக்கும் வேலைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துதல் கண்காணிப்பு நடவடிக்கைகள் தொடர்பில் விளக்கமளித்தல் மற்றும் ஆலோசனைகளை வழங்குவது மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்களினையும் பிறந்து பிரதேச செயலாளர்களாலும் மேற்கொள்ளுமாறு அறியத் தருகின்றேன்.

இப்பணிகளின் பொருட்டு முன்னுரிமை வழங்கி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வினையமுடன் அறியத் தருகின்றேன்.

சீ.டீ.களுஆரச்சி

பணிப்பாளர் தலைமைஅதிபதி.

**<u>பிரதிகள்.</u>**

1. செயலாளர் கிராமிய அபிவிருத்தி சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சு - த.கூ.கபொருட்டு
2. மேலதிக பணிப்பாளர் தலைமை அதிபதி (திட்டமிடல்) - சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - உ.ந.பொருட்டு
3. மேலதிக பணிப்பாளர் தலைமை அதிபதி (அபிவிருத்தி) - சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - உ.ந.பொருட்டு
4. சகல பிரிவுத் தலைவர்கள் - சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - உ.ந.பொருட்டு
5. பிரதம கணக்காளர் - சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - உ.ந.பொருட்டு
6. பிரதான உள்ளக கணக்காய்வாளர் - சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - உ.ந.பொருட்டு
7. தலைமை பீட/சமுர்த்தி வங்கிச் சங்க/கருத்திட்ட/சமுர்த்தி வங்கி முகாமையாளர்கள். - உ.ந.பொருட்டு

TRANSLATED BY – M.M.M. JAWHAR (Translator)